செய்தி வெளியீடு எண்:120 நாள் :24.02.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு இன்று (24.2.2016) மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு பிறந்த நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தமிழக ஆளுநர் டாக்டர் கே.ரோசய்யா அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு வாழ்த்துக் கடிதம் மற்றும் பூங்கொத்து அனுப்பி தனது பிறந்த நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு ஆந்திரப் பிரதேச மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் திரு. M.வெங்கைய்யா நாயுடு ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு பிறந்த நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சியின் நிஜாமாபாத் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி கல்வகுண்ட்ல கவிதா, சென்னையிலுள்ள அமெரிக்க துணை தூதரகத்தின் துணை தூதர் திரு. பிலிப் A.மின் அவர்கள் (Mr. Phillip A. Min, Consul General, Consulate General of America, Chennai) ‘‘துக்ளக்’’ வார இதழின் ஆசிரியர் திரு. சோ. ராமசாமி, திரைப்பட நடிகை திருமதி B.சரோஜா தேவி, “The New Indian Express” Group of Publications-ன் தலைவரும்,

மேலாண்மை இயக்குநருமான திரு. மனோஜ்குமார் சொந்தாலியா, “தினத்தந்தி” நாளிதழின், நிருவாக இயக்குநர், திரு. S.பாலசுப்பிரமணியன் ஆதித்தன், “ஆற்காட் நவாப்’’ திரு. முகமது அப்துல் அலி ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ‘செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு பூங்கொத்தும், வாழ்த்துக் கடிதமும் அனுப்பி பிறந்த நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
நாள் : 24.2.2016